# நான் முதலமைச்சரானால்

## முன்னுரை

ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பு முதலமைச்சரிடமே உள்ளது. அத்தகைய முதலமைச்சரின் பணி கணக்கில் அடங்காதது. இக்கட்டுரையில் நான் முதலமைச்சரானால் என்ன நடக்கும் என்பதைக் காண்போம்.

## முதலமைச்சர் – அறிமுகம்

ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள பல துறைகளுக்குப் பொறுப்பாளராக அமைபவர் அமைச்சர். அவ்வமைச்சர்களைப் பதவியில் ஏற்படுத்தவும் நீக்கவும் உரிமை உள்ளவர் முதலமைச்சர் ஆவார். மக்களுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துபவர் அவர். இன்னொரு வகையில் அவரை நாட்டின் அரசன் என்றும் சொல்லலாம்.

## கல்வித்துறை

நான் முதலமைச்சரானால், தமிழகத்தில் அனைத்துப் பள்ளி, கல்லூரிகளில் கணினி வழிக்கல்வியை ஏற்படுத்துவேன். சமச்சீர்க்கல்வியை மேம்படுத்தும் வகையில் பள்ளியில் இணைய நூலகம் உருவாக்குவேன். மாணவர்கள் வீட்டில் இருந்து கற்றலை மேம்படுத்த இணைய உரையாடலை உருவாக்குவேன்.

## தொழில்துறை

தமிழகத்தில் இல்லாத புதிய தொழில்துறைகளை உருவாக்குவேன்.. ஆறுகள் மாசு அடையாதபடி, தோல் தொழிற்சாலை, ஆடை தொழிற்சாலைகளை மூடுவேன். புதிய தொழில்களைக் கண்டறிந்து தொழில்பயிற்சி அளிப்பேன்.

## விவசாயத்துறை

கிராமங்களில் நீர்ப்பாசனம், ஏரிப்பாசனத்தை மேம்படுத்துவேன். மும்முனை மின்சாரத்தைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவேன். விவசாயக் கூலிகளுக்கு விவசாயம் செய்ய புறம்போக்கு நிலங்களைத் தானம் தருவேன். செயற்கை உரத்தை ஒழித்து, இயற்கை உரத்தை வழங்கி, இயற்கை விவசாயத்தை உருவாக்குவேன்.

## சுற்றுச்சூழல்துறை

சுற்றுச்சூழல் என்று புதிதாக ஒரு துறையை உருவாக்குவேன். சுற்றுச்சூழலைப் பாதிக்கும் தொழிற்சாலைகளை, தொழில்நுட்பங்களைத் தவிர்க்கச் செய்வேன். வீதி தோறும் மரம் நட்டு, இயற்கையை வளர்ப்பேன். மாவட்டந்தோறும மூலிகைப் பண்ணைகளை உருவாக்குவேன். இயற்கையை அழிக்கக்கூடாது என்ற சட்டத்தை உருவாக்குவேன். குப்பைகளை, கழிவுகளை, காகிதக்குப்பைகளை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகளை உருவாக்குவேன்.

## தொழில்நுட்பத்துறை

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது தொழில்நுட்பத்தில்தான் உள்ளது. மென்பொருள் பூங்காவை நகரமெங்கும் உருவாக்குவேன். உலகத்திலேயே அதிக மென்பொருள் வல்லுநர்கள் பணிபுரியும் மாநிலமாக ஆக்குவேன் எனவே, தமிழகத்தில் புதிய தொழில்நுட்பப் பூங்காவை நகரங்களில் ஏற்படுத்துவேன். தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகப் பள்ளியில் அமைப்பேன்.

## வேலைவாய்ப்புத்துறை

தொழில்சார்ந்த கல்வியை முன்வைத்துப் புதிய புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி அனைவருக்கும் வேலை வாய்ப்பை உருவாக்குவேன். சாதி, இன, மத அடையாளங்கள் இல்லாமல், தேர்வு வைத்துத் தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவேன். அனைவருக்கும் வேலை திட்டம் என்று ஒன்றை உருவாக்குவேன்.

## கருத்துரை

முதலமைச்சரின் பணிகள், மாநிலத்தின் முன்னேற்றத்திற்குத தக்கபடி அமைய வேண்டும்.

## முடிவுரை

சான்றோர்களின் அறிவுரைகளைக் கேட்டு, புதிய சிந்தனைகளை உடைய இளைஞர்களின் சிந்தனைகளை வரவேற்று, இந்திய நாட்டில், அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குவேன்.